# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ *fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |


| | | |
|---|---|---|
| **20 மே 2018** | **தூய ஆவியார் பெருவிழா** | இரண்டாம் ஆண்டு |



அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

# உங்கள் சிந்தனைக்கு

அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

இன்றைய நற்செய்தியில் இயேசு தன் சீடர்களுக்குத் தூய ஆவியைக் கொடுக்கிறார். சோர்ந்து போயிருக்கிற உள்ளங்களுக்கும், வாழ்க்கைப் புயலில் அடித்துச் செல்லப்பட்டுக் கரை காண முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் உள்ளமுடைந்தவர்களுக்கு உறுதி தரும் பணியைச் செய்கிறவர் தூய ஆவியானவர். பயந்து நடுங்கிக் கொண்டு, தங்களது உடைமைளையும், உரிமைகளையும் காப்பாற்றிக் கொள்ள பயந்து ஓடிய சீடர்களுக்குத் துணிவைத் தந்தவர் தூய ஆவியானவர். அவர் பொருளல்ல. ஆண்டவரின் ஆவி.

படைப்பதும் புதுப்படைப்பாக்குவதும் தூய ஆவியாரின் செயல். ஒன்றுமில்லாமையில் இருந்து உண்டாக்குவது படைப்பு. இறைவன் உலகைப் படைத்தபோது, ஒன்றுமில்லாமையில் இருந்து, வெறுமையிலிருந்து (தொடக்கநூல் 1:1) அசைந்தாடிய ஆவியாரின் ஆற்றலால் அனைத்தையும் படைத்தார். அவ்வாறே தம் உயிர் மூச்சை ஊதி மனிதனைப் படைக்கிறார். இவ்வாறு தூய ஆவியை ஊதுவதால், தூய ஆவியாரின் செயல்பாட்டால் படைப்புகள் உண்டாகின.

மனிதன் பாவம் செய்த பின் அதே தூய ஆவியார், அவன் மீது செயல்படும்போதும், அவன் மீது ஊதப்படும்போதும் அவன் புதிதாகப் படைக்கப்படுகிறான். பேயை விரட்டும்போதும், நோயைப் போக்கும்போதும், பாவத்தை மன்னிக்கும்போதும், அர்ச்சிக்கும்போதும், அருள் வாழ்வுக்கு அழைக்கும்போதும், தூய ஆவியார் செயல்படுவதால், மனிதன் தன் உடலிலும் உள்ளத்திலும் மாற்றம் பெறுகிறான். தூய ஆவியார் அவனைப் புது படைப்பாக்குகிறார்.

இவ்வாறு புதுப்படைப்பாக ஆக்கப்படும்போதெல்லாம் மனிதனின் பாவங்கள் கழுவப்படுகின்றன. பாவ மன்னிப்பு கொடுத்து புதுப்படைப்பாக்கும் அருளை, திருத்தூதர்களுக்கும் அவர்கள் வழியாகத் திரு அவைக்கும் தூய ஆவியார் வழங்குகிறார். திரு அவை வழங்கும் ஒவ்வொரு திருவருட்சாதனத்திலும் தூய ஆவியார் நம் மீது பொழியப்படுவதால், நம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. நாம் புதுப்படைப்பாகிறோம். புதுப்படைப்பாகும் நம்மில் 'உங்களுக்கு அமைதி உரித்தாகுக' என்னும் வாழ்த்து முழுமையாகக் கிடைக்கிறது. ஆவியானவரின் பிரசன்னத்தால் நிரப்பப்பட நாம் மன்றாட வேண்டும். இந்த தூய ஆவிதான் வழிநடத்துகிறவர். அன்புப் பணி செய்யத் தூண்டுகிறவர். உண்மைக்கு குரல் கொடுக்க உறுதியைக் கொடுக்கிறவர். அந்த தூய ஆவியானவரின் ஆற்றலோடு, இறைவனுக்கேற்ற பணிகளைச் செய்ய முடியும். தூய ஆவியார் தரும் கொடைகளைப் பெற்று மகிழ்ந்து இனிது வாழ்வோம். வாழ்த்துக்கள்.

# ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணி

**நாள்: 20-05-2018, ஞாயிறு மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம் மதியம் **2:30** முதல் **4:00** மணி வரை மூடப்பட்டிருக்கும். நம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தத் தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கிறோம்.



# இடைவிடா சகாய அன்னை நவநாள்

**சனிக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு** தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும். அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.



# GIFT திட்டத்திற்கான இரண்டாவது காணிக்கை

இன்றையத் திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாம் காணிக்கை நமது உயர்மறைமாவட்டத்தின் GIFT (நம்பிக்கையுடனும் நன்றியுணர்வோடும் கொடுத்தல்) திட்டத்திற்காக வழங்கப்படும். அதற்கான உங்கள் பங்களிப்புகளைக் காணிக்கைப் பைகளில் போடும்படி அன்புடன் வேண்டுகிறோம். இக்காணிக்கையானது நமது உயர்மறைமாவட்டத்தில் செயல்படும் பல்வேறு அமைப்புகளுக்காகவும் கட்டிடத் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படும். தாராள மனதுடன் கொடுக்கும் உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## பெரியோருக்கான கிறிஸ்தவப் புதுமுக வகுப்புகள் (RCIA)

நமது கத்தோலிக்க நம்பிக்கையைப் பின்பற்றி வாழ விரும்புவோரை உங்களுக்குத் தெரியுமா? **26-06-2018** முதல் **RCIA** வகுப்புகள் ஆங்கிலத்தில் நடைபெற உள்ளது. செவ்வாய்க்கிழமைகளில் இரவு **7:30** மணிக்கு நடைபெறும் வகுப்புகளில் நீங்களும் ஆதரவாளர்களாகக் கலந்து கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

## பொது விடுமுறைத் திருப்பலி நேரம்

**29-05-2018** செவ்வாய் ~ விசாக தினம்.

அன்று நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை.

காலை **9** மணிக்கு ஆங்கிலத் திருப்பலி, காலை **10** மணிக்கு தமிழ் திருப்பலி

(மதியம் **12** மணி முதல் நம் ஆலய வளாகத்தின் இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருக்கும்.)

## ஆலயப் பணிக்குழுக்களின் ஒன்றுகூடல்

நமது ஆலயத்தில் வரும் **15 ஜூன் 2018** ஞாயிறு காலை **11** மணி முதல் மாலை **4** மணி வரை ஆலயப் பணிக்குழுக்களின் ஒன்றுகூடல் (Parish Assembly) நடைபெறும். இதில் பங்கு கொள்ள விரும்புவோர் உங்கள் பெயர்களை உங்கள் ஆலயப் பணிக்குழுத் தலைவர் மூலமாகவோ, நேரடியாக அலுவலகத்திலோ **28 மே 2018**க்குள் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பி | ள | வு | ற் | ற | ர் | ள | யா | ணை | து |
| லி | ல | ய | க் | றை | ன் | சா | ச் | க | ந் |
| னே | நா | கு | ப | ணி | யா | ள | ன் | ஒ | ரு |
| ர் | தா | க் | ற் | மை | ண் | தி | பி | லை | மி |
| யூ | யா | லு | லு | தை | த் | வே | ல் | ம | ட |
| அ | தி | த | பு | க | ய் | ஞா | ய | வி | னி |
| ரி | மை | டு | ண | ள | து | வி | னி | ற | ன் |
| யை | மை | ண் | உ | யா | லா | க | ஊ | வு | எ |
| ணை | ம | தூ | ட் | உ | ல் | றை | லி | ழி | க் |
| யை | வி | ஆ | ம் | த | ந் | சொ | ற | அ | ம |

1. _________ இச்சை தூய ஆவிக்கு முரணானது.
2. தூய ஆவியின் _________ ஏற்ப வாழுங்கள்.
3. அவர் என்னிடமிருந்து பெற்று உங்களுக்கு _________.
4. அவர் முழு _________ நோக்கி உங்களை வழிநடத்துவார்.
5. உமது ஆவியை அனுப்பி _________ முகத்தைப் புதுப்பிக்கின்றீர்.
6. ஒவ்வொருவரும் தம் _________ மொழிகளில் அவர்கள் பேசக் கேட்டனர்.
7. நெருப்புப் போன்ற _________ நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது.
8. தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிற _________ வருவார்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதலாம் வாசகம்:** | திருத்தூதர்பணிகள் 2 : 1 – 11 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 104 : 1, 24, 29 – 31, 34 |
| **பதிலுரை:** | ஆண்டவரே, உம் ஆவியை அனுப்பி, மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர். |
| **இரண்டாம் வாசகம்:** | கலாத்தியர் 5 : 16 – 25 |
| **நற்செய்தி வாழ்த்தொலி:** | அல்லேலூயா! அல்லேலூயா! தூய ஆவியே, எழுந்தருளி வாரும், உம்மில் நம்பிக்கை கொண்டோரின் இதயங்களை நிரப்பியருளும், அவற்றில் உமது அன்பின் தீ பற்றி எரியச் செய்தருளும். அல்லேலூயா! |
| **நற்செய்தி வாசகம்:** | யோவான் 15 : 26 – 27; 16 : 12 – 15 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | | |
|---|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) | : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) | : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) | : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) | : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) | : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) | : | காலை 10:00 மணி |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | | |
|---|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை | : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை | : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை | : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ்   | செபமாலையும் விவிலியப் பகிர்வும் | : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை | : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் | : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் | : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை | : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் | : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் | : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் | : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு | : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.